திருவள்ளுவர் ஆண்டு 2036

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 2 பிப்ரவரி 2005

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

## மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்


தொகுதி : 99
பகுதி : 2
பிப்ரவரி 2005

(தோற்றம் 1903) திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2036




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.1201911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


செயலர், ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்

இதழ் மணம் 39

சங்க இலக்கியங்களின் வழி மதிப்புக் கல்வி 41

*பேராசிரியர் தமிழண்ணல்*

அருளிச் செயல் கவிதைக் கோட்பாடுகள் 47

*பேராசிரியர் முனைவர் இரா. அரங்ராசன்*

வாழ்க்கை நெறி 52

*பேராசிரியர் முனைவர் கி. இளங்கோவன்.*

அருட்கவி கு.செ. இராமசாமியின் அம்மன் பாடல்கள் 59

*பேராசிரியர் முனைவர் பழ. முத்துவீரப்பன்*

*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

# இதழ் மணம்

பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் மானுட விழுமியங்கள், பெருமிதவுணர்வு குறித்த சங்கச் சான்றோர் வாழ்வு நெறியைச் சுட்டிக்காட்டி இன்றையத் தமிழ்ச் சான்றோர் நிறையுடைமை குன்றிய நிலையில் தமிழ்க்காப்பு முயற்சியில் பின்னடைந்து தயங்கித் தாழ்ந்து வாழ்வதைச் சுட்டிச் செல்வது சான்றோர் சிந்தனைக்குரியதாகும். தமிழ் கற்பிக்கும் நெறி, கற்கும் நெறி குறித்த கட்டுரைச் செய்திகள் தமிழ் மாணவர் ஆசிரியர்கள் உளம் கொள்ளத்தக்க உண்மையாகும்.

வியாக்கியான சக்கரவர்த்தி நம்பிள்ளையின் மெய்ப்பொருள் அனுபவத்தையும் உரை நுட்பத்தையும் பேராசிரியர் இரா. அரங்கராசன் அவர்கள் நுண்ணிதின் நுழைந்து கற்றதம் வாழ்நாள் அனுபவத்தினால் ''அருளிச் செயல் கவிதைக் கோட்பாடுகள்'' என்னும் தலைப்பில் தருகிறார். தமிழ்ச் சுவை நிறைந்த திருவாய் மொழி இன்பத்தைக் கட்டுரையின் வரிகள் தோறும் கற்று இன்புறலாம். கட்டுரை ஆய்வுப் புலம் நிறைந்ததும் சொற்செறிவு நிறைந்ததுமாகையால் மாணவர்கள் ஊன்றிக் கற்றுப் பயன்பெற வேண்டும்.

பேராசிரியர் சி. இளங்கோவன் மெய்ப் பொருள் அறிவும் இறையன்பும் வாழ்க்கைப் பயணத்தில் தாழ்வின்றி ஓங்கி உயரப் பறக்கத் தேவையான இரண்டு சிறகுகள் என்பதை எடுத்துரைக்கிறார். அறிவு மட்டும் போதாது மெய்யுணர்வும் அருளும் இன்றியமையாத தேவை என்பதை ஆசிரியர் உணர்த்தும் பாங்கு கற்று இன்புறத் தக்கது. புறப் பொருள் அறிவே போதும் என்று நினைக்கும் உலகியல் பார்வையிலிருந்து மாறுபட்டு உலகியல் வெற்றிக்கும் அகவுணர்வில் இறையருளும் இறையன்பும் கலந்து நிற்கும் சிந்தனையும் அதற்குரிய செயற்பாடும் வேண்டும் என்பதைப் பேராசிரியர் தெளிவுறுத்துகிறார். இக்காலப் பொருளாய்தச் சிந்தனையாளர்களுடைய சிந்தனைக்குரியது. மற்றவர்களுக்கு வாழ்க்கைக்குரியது.

அருட்கவி கு.செ. இராமசாமி அவர்கள் சிவகங்கை மன்னர் துரைசிங்கம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஒய்வுபெற்று நம்மோடு வாழும் தமிழ்க்கவி. அப்பெரும் புலவர் பெருமானுடைய அருட் கவித் திறத்தைப் பேராசிரியர் பழ. முத்துவீரப்பன் அவர்கள் திறனாய்வு நோக்கோடு ஆய்வு செய்து கவிதை இன்பத்தைக் கற்போர் உளம் கொள்ளத் தக்க வகையில் அளித்து கட்டுரை முழுவதும் முயன்று வெற்றி பெற்றுள்ளார்.

பேராசிரியருடைய கட்டுரை நீண்டதாக இருப்பினும் ஆற்றொழுக்கான நடையும் செந்தமிழ்க்கவி இன்பமும் கற்போருக்கு மனநிறைவு அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

செந்தமிழ்ப் புரவலராகப் பரமக்குடியைச் சேர்ந்த பாரம்பரியமிக்க வாணிகக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் அன்புடைய பெருமக்கள் ச. கணேசன், ச. பாலமுருகன், உடன் பிறப்புக்கள் இருவரும் ரூபாய் ஆயிரம் செந்தமிழ் வளர்ச்சி நிதி அளித்துள்ளார்கள். அவர்கள் தமிழ் நெஞ்சத்தைப் போற்றி அவர்தம் குடி வழிவழி சிறக்க வாழ்த்துவோம்.

# சங்க இலக்கியங்களின் வழி மதிப்புக் கல்வி

பேரா. தமிழண்ணல்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சங்க இலக்கியங்களின் வழி மதிப்புக் கல்விக்குத் தேர்வு செய்வது, கற்பது, கற்பிப்பது பற்றிச் சில காட்டுகள் மட்டும் காண்போம்

சங்க இலக்கியம் முழுவதும், தொட்ட இடமெல்லாம் மானுட மதிப்புப் பற்றிய பகுதிகளே மீக்கூர்ந்து காணப்படுகின்றன.

அது காட்டுமிராண்டி வாழ்வெனப்படும், மானுடவியற்காலம் மற்றும் பழைய கற்காலம் தொட்டு வளர்ந்த, மனித இன வளர்ச்சிகளையும் கோடிட்டுக் காட்டுகிறது.

அடுத்து, உழவு மேற்கொண்டு, (உலோக காலம் எனப்படும்) வேளாண்மை நோக்கிய வளர்ச்சிகளையும் பெருமளவு விரித்துக் கூறுகிறது

நமக்குக் கிடைத்திருக்கும் தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் இங்ஙனம் இன்றைய மலைவாழ் பழங்குடி மக்களைப் போல வாழ்ந்தவர்களையும் காட்டி, அவர்களை மதிப்புறு மனித இனமாக மாற்ற முயன்ற புலவர்களின் முயற்சிகளையும் வெளிப்படுத்தி, கீழ்மட்டத்தில் இருந்தவர்களையும் மேல்மட்டத்திற்கு உயர்த்துவதற்கான இலக்கியமாகவே காணப்படுகின்றன.

இத்தகைய பண்பாடு குறைந்த காலமென்பது பழங்குடியினர், விலங்கினத்தினின்றும் சிறிது சிறிதாக மேம்பட்டு வளர்ந்த நிலையையே குறிக்கும். அதனால், பண்பட்ட செய்திகளையே பாடி, பண்படுத்தும் நோக்கிலேயே பயிற்றி, மக்களினத்தை முன்னேற்றப் பாதையிலேயே செலுத்தும் நோக்கையும் போக்கையும் சங்க இலக்கியத்திற் காணலாம்.

இடையே புகுந்த, அன்றைய நிலையில் பிற நாட்டினதும், பிற மொழியினதுமான புறச் சமயப் பண்பாட்டுப் படையெடுப்புக்களால், தமிழினம் நெறிகெட்டுப் பண்பாட்டையும் இழக்க இருந்த நேரத்தில், அந்தப் புறப்பண்பாட்டு நெறிகளை நம்பித் தொலைத்த, தமிழ் வேந்தர்கள் உட்பட்ட மக்களைத் திருத்தி, தமிழர் பண்பாட்டு வழித்தடத்தில் மீண்டும் செலுத்தப் பிறந்ததே திருக்குறள்.

பிறமொழிப் படையெடுப்பிலிருந்து தமிழைக் காக்கப் பிறந்தது தொல்காப்பியம். பிற நாட்டார் புகுந்ததால் ஏற்பட்ட சீரழிவுகளின் தோற்றத்தையும், தமிழ்ப் பண்பாட்டின் ஏற்றத்தையும் காட்டுவன சங்க இலக்கியங்கள். உண்மையில் சங்க இலக்கியம் தமிழினத்தின் வீழ்ச்சியையே காட்டி, அவற்றிலிருந்து தமிழையும் தமிழினத்தையும் மீட்கவும், மீட்டுருவாக்கவுமே பாடப்பட்டனவாகத் தோன்றுகின்றன.

புறப் பண்பாடுகளால் ஏற்பட இருந்த, வீழ்ச்சிகளைத் தடுத்து நிறுத்தித் தமிழினப் பண்பாட்டை நிலைநிறுத்தியது திருக்குறள்.

இதனால் மானிட மதிப்புகளின் கொள்கலமாக, கருவூலமாக உலகமுள்ளளவும் நிலைபெறும் மனவுணர்வுப் படப்பிடிப்புகளாகச் சங்க கால நூல்கள் விளங்க நேர்ந்தன.

## மனித மதிப்புக் கல்வி

### 1. தன்னீகம் – தவம்

தோழி தலைவனை, அவன் பிரிந்து நாளாகிவிட்டதால், வருந்தும் தலைவியிடம், இவன் சிறிதும் அன்பே இல்லாதவன் என்று கடிந்து கூறிவிட்டாள். உண்மையிலேயே பிரிவால் வாடி மெலிந்து வருந்தி இருக்கும் தலைவிக்கு, தலைவனைத் தோழி குறைத்துச் சொல்லியது பொறுக்கவில்லை. அன்பின் எல்லை அதுவாகலின், ‘‘அப்படியன்று தோழி! மக்களுக்குத் தங்களால் அன்பு செய்யப்பட்டவர்களால் துன்பங்களே வந்தாலும், அவையே இன்பமாகும். எல்லோரும் சொர்க்கவுலகம் இன்பம்

என்கிறார்களே, அது என்ன இந்த இன்னாமையை விட இனிதாக இருக்குமோ?'' என்று பரிந்து பேசுகிறாள் தலைவி.

மிளகுக் கொடிகளின் தளிரைத் தின்று வளரும் குரங்குகள் திரியும் மலைநாட்டுக் குறிஞ்சித் தலைவன், என்பால் அன்புடைய இனியவனே! அதனால் அவள் கேட்கிறாள்.

............. ........ இனத்தின் இயன்ற
இன்னாமையினும் இனிதோ
இனிது எனப்படும் புத்தேள் நாடே (குறு: 288)

கபிலர் சொல்வது இது. பாரியை மூவேந்தரும் முற்றுகையிட்ட போது, அத்தனை துன்பங்களையும் நண்பனுக்காக அனுபவித்தவர் அவர். குழந்தைக்காகத் தாய்படும் துன்பம்; மொழிக்காக விடாது போராடுவோர் புறக்கணிக்கப்படும் துன்பம்; வ.உ.சி. செக்கிழுத்த துயரம்; மனைவிக்காகக் கணவனும் கணவனுக்காக மனைவியும் தத்தம் இன்ப வாழ்வைத் துறக்க நேரும் துன்பங்கள் எல்லாம் இன்பங்களேயாம். அவை துறக்கவுலக இன்பத்தைவிட இனியவையாம். இதனை எத்தனையோ உலக நிகழ்வுகளைக் காட்டி விளக்கலாமே?

## 2. மனித நேயம்

கோவூர் கிழாரின் பாடல்களைப் பாடமாக்கி, அவர்தம் வரலாறு கூறி, இன்றைய நிலையோடு ஒப்பிடலாம். நூறு சான்றுகள் உளவெனினும், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்போம்.

நலங்கிள்ளி முற்றுகையிட, உள்ளேயிருந்த நெடுங்கிள்ளி வெளியே வராமலும், போர் செய்யாமலும் கோட்டையை அடைத்துவிட்டதால், மக்களும் குழந்தைகளும் யானை முதலான உயிரினமும் பட்ட பாட்டை விளக்கிக் கூறி,

அறவை யாயின் நினது எனத் திறத்தல்
மறவை யாயின் போரொடு திறத்தல் (புறம் 44)

என்று கோவூரார் இடித்துக் கூறியவை, இன்றும் நினைக்கத் தக்கதாகும். இராக்கிலும் யாழ்ப்பாணத்தும் மக்கள் படும்பாடு

_லகறிந்ததே. தீவிர வாதம் இருவகை: 1. தற்காப்புக்காக .ஆணவத்தினால். இதனை நோய் நாடி, நோய் முதல் நாடுவது போல, ஆராய்ந்து தீர்க்கவோ, ஒடுக்கவோ வேண்டும்.

இருவரிடையே பகை ஏற்பட, சாதாரணப் பொதுமக்கள், தொடர்பற்றவர்கள், பகை பற்றி ஏதும் அறியாதவர்கள், ஒரு பாவமும் செய்யாது வெறுமனே திரிபவர்கள் கொல்லப்படுவது, அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது.

ஒரு குடிப் பிறந்தோர் தம்முள் சண்டையிடாது ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமென்பது பற்றியும் அடுத்த பாடலில் அவர் அறிவுரை கூறுகிறார். இன்று சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் கட்சியின் பெயராலும் தமிழினம் வேற்றுமைப்பட்டு மோதிக் கலகம் செய்து, அழிவதென்பது நடைமுறையாகிவிட்டது.

கிள்ளிவளவன் தன் பகைவன் மலையமான் மீது கொண்ட காழ்ப்பால், அவன் மக்களை யானைக் காலில் போட்டு, மிதிக்க வைத்துக் கொல்ல முயன்றான். அப்போது கோவூரார் குறுக்கிட்டு, அழுகின்ற குழந்தைகள் யானையைப் பார்த்து, அழுவதை மறந்து, மருண்டு நிற்பதைக் காட்டி, ஒரு குற்றமும் அறியாத குழந்தைகளைக் கொன்று விடாமல் காப்பாற்றுகிறார் (புறம்:46) இன்று விமானம் கடத்தல், யாரையேனும் கடத்திப்போய் வைத்து, மிரட்டிப் பணம் கேட்டல், பெண்களைக் காவலர்களே கடத்திப்போய், அடைத்து வைத்துக் கற்பழித்தல் என நாம் செய்தித்தாள்களில் படிக்கும் செய்திகளே மிகப்பல.

அதே போல இளந்தத்தன் என்ற புலவரை, ஒற்று வந்தார் என எண்ணி, நெடுங்கிள்ளி கொன்றுவிட முயன்றான். அப்போதும் கோவூரார் குறுக்கிட்டுப் புலவரைக் காப்பாற்றினார்.

..... ....... ...... திறப்பட
நண்ணார் நாண அண்ணாந்து ஏகி,
ஆங்கு இனிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண் ஆள் செல்வம் எய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே (புறம்: 47)

இன்று உலகெங்கும் நடைபெறும் கயமைகளைக் கண்டித்துக் கூற, சான்றோர்கள் தயங்குகின்றனர். தமிழே படிக்காமல், மாநிலத் தாய்மொழியை அறவே விட்டுவிட்டு, மழலையர் முதல் பட்டப்படிப்பு வரை படிக்க, அரசு ஆணை ஒன்று உதவுகிறது; அவ்வாறு புறக்கணிப்போரை அரசு அரவணைக்கிறது. கடந்த 36 ஆண்டுகளாக நடைபெறும், இக்கொடுமை தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இதைக் கடிந்து கூறினால் பகையுண்டாகும். பரிசு, பதவி கிடைக்காது என்று சான்றோர்களும் அரசியல் தலைவர்களும், 'நன்றி கொல்வதை' நவிலவே அஞ்சுகின்றனர். இந்த நாட்டில்தான் கோவூராரும் அரசனையே பார்த்து, உனக்கு எந்த அளவு செம்மாந்த நிலையுண்டோ, அந்த அளவு எம்போலும் புலவர்க்கும் உண்டு என்று கூறினார்.

இப்பெருமித உணர்வு, மான உணர்வு, மனித நேய உணர்வுக்குப் பல நிகழ்வுகள், அவை பற்றிப் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் நிரம்பவுள.

அவற்றைப் பாடமாக்கினால் போதாது. அறிஞர், சான்றோர், கல்வியாளர்கள் என்போர் எதனையும் எதிர்பாராதும் அஞ்சாதும் தீமையைத் தீதென்று கூறி, அதனால் ஏற்படும் அவலங்களைத் தாங்கி, உலகை நல்வழிப்படுத்த வேண்டுமென இதன் மூலம் கற்பிக்கலாமே?

இவ்வளவு காலங் கழித்தேனும், ஐ.நா.தலைவர் கோபி அன்னான், அமெரிக்கா ஈராக்கின் மீது படையெடுத்தது தப்பே! என உலகறியக் கூறியுள்ளது. நம் கோவூராரை நினைவூட்டவில்லையா?

வேலியே பயிரை மேய்வது போல, நல்வழி காட்ட வேண்டிய சான்றோர்களே, தீமைகளின் பக்கம் சாயலாமா?

### 3.உயிர் இரக்கம்

ஒரு தலைவன், வருகிற வழியில் சிறு வண்டுகள், இணைபிரியலாகாது என்று, "தாதுண் பறவை பேதுறல் அஞ்சி,

மணி நா ஆர்த்த மாண்வினைத் தேரனாய்'' வருகிறான். இதைப் படம்பிடிக்கும் குறுங்குடி மருதனார், அன்று சிற்றுயிர்களிடத்தும் மனிதர்கள் காட்ட வேண்டிய உயிர் இரக்கத்தையே இதன் மூலம் வற்புறுத்துகிறார் *(அகம்: 4)*

ஓர் இளம்பெண் தங்கள் விளையாட்டில் போட்ட விதையால் தானாக வளர்ந்த புன்னையைத் தன் தங்கை என்றே கூறுவது, அன்று இயற்கையுடன் மனிதன் கொண்டிருந்த உறவையே காட்டுகிறது (நற். 127) இன்று இரக்கமின்றி, மரங்களை வெட்டுபவர்களுக்கும் இயற்கையை அழிப்பவர்களுக்கும் இது ஒரு நல்ல பாடமன்றோ? பெயர் தெரியாத புலவர் பாடிய இப்பாட்டு, அவரின் பெரும் சிறப்பையே, நமக்குக் காட்டுகிறது.

இவை போலவே தன்மானம் பற்றியும் தன்னம்பிக்கை பற்றியும் நிரம்பப் பாடல்கள் உள. தன் முயற்சியைப் பற்றிப் பாலைப் பாடல்கள் தோறும் காணலாம். இல்லத்தில் சோம்பி இருப்பவனை இடித்துரைப்பன; செய்வினை முடித்த செம்மல் உள்ளத்தைச் சிறப்பிப்பன எனப் பல பாடல்கள் உள. ஆட்சிமுறை எவ்வாறமைய வேண்டும். அதிகாரிகள் எவ்வாறு நடக்கும்படி செய்ய வேண்டும்; வரிவாங்கும் முறை யாது; கல்வியின் சிறப்பு என்ன; பெண்ணுக்குத் தற்காப்பு எத்துணை இன்றியமையாதது; உழவின் சிறப்பு என்ன; நட்பின் உச்சம் யாது; மென்மைப் பண்பு - பண்பாடு - நாகரிகம் பற்றிய உயர்ந்த எல்லைகள் யாவை என இவ்வாறு வரும் மனித மதிப்புகளின் கொள்கலனே, அரும்பெறல் பெட்டகமே நம் சங்கப் பாடல்கள்.

இலக்கணப் பார்வை, இலக்கியத் திறனாய்வுப் பார்வை, உரைவிளக்கத்திலேயே இடந்துழலும் பார்வை ஆகிய இவற்றை ஒருபுறம் - ஒரு சிறிது ஒதுக்கி வைத்துவிட்டு, மனித மதிப்புக்கள் - மானுட விழுமியங்கள் பற்றிய பார்வையைச் சற்றே செலுத்தினால், அவற்றின் அருமையும் பெருமையும் புலப்படும். சங்கப் பாடல்கள் முற்றிலும் மனித வாழ்வு ஏற்றிப் பாடல்களாக விளங்குவது, கற்போர்க்கும் கற்பிப்போர்க்கும் நன்கு விளங்கும்.

# அருளிச் செயல் கவிதைக் கோட்பாடுகள் (6)

*பேராசிரியர் முனைவர் இரா. அரங்கராஜன்*

**மனப்பயணங்கள்**

திருவாய்மொழிப் பாசுரங்களினிடையே ஆழ்வாரின் மனப் பயணங்கள் இடையறாது ஒழுகிச் செல்கின்றன. இரண்டு பாசுரங்களினூடே நெடுகி நீண்ட பயணச் செய்திகளை ஆங்காங்கே உரையாசிரியர் தாமும் ஆழ்வாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்று உணர்த்துகிறார். ஓரிடம் காட்டுகிறோம்; கேண்மின்:

திருவாய் மொழி முதற்பத்தில் பத்தாம் பதிகத்தின்கண் ஆழ்வார் இறைவன் தம்மிடத்துக் கைம்முதல் கருதாப் பெருங் கருணைத் திறத்தால் உபகரித்து வருவதை நீடு நினைந்து போற்றுகிறார். அப்போற்றுதலுக்கு ஊடே ஆழ்வார்,

> எந்தையே என்றும் எம்பெருமான் என்றும்
> சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்
> எந்தை! எம்பெருமான்! என்று வானவர்
> சிந்தையுள் வைத்துச் சொல்லும் செல்வனையே (1-10-7)

என்று வியப்புற்றுப் பேசுகிறார்.

இறைவனுடைய திருப்பெயர்களைச் சிந்தையுள் வைப்பதற்கும் நாவினால் சொல்வதற்கும் தமக்குத் தகுதியில்லை என்று உணர்ந்து இறைவனைவிட்டு அகல முனைந்தார்.

விண்ணுளாரான பெருமக்களுக்கே அத்தகைய தகுதி உளது என்றும் அவர்களாலே ஏத்தித் தொழப்படும் பெரியோனைத் தாம் அழுக்குடம்போடும் எச்சில் வாய்கொண்டும் பரவுவது வேள்வித் தீயில் இடப்படும் ஆவுதியை நாய் தீண்டினாற்

போலாகும் என்று ஆழ்வார்க்கு எண்ணம் விளைந்தது. எந்தையே! என்றும் எம்பெருமான்! என்றும் திருநாமம் சொல்லத்தக்கவர் வானோர்க்குயர்ந்து விண்ணுலகத்தில் வாழும் நித்திய சூரிகளாயிருக்க மண்ணுலகிற் பிறந்த தாம் அத்தகைய திருநாமங்களை உச்சரித்தல் இழுக்கன்றோ! என்று நினைத்து இறைவனுடைய திரு நாமங்களை எண்ணவும் சொல்லவும் தகாத இடம் தேடி ஆழ்வார் புறப்பட்டார். இரணியன் இறையாண்மையுள்ள இடம் தேடிப்புறப்பட்ட ஆழ்வார் அடுத்த பாடலில்,

செல்வநாரணன் என்ற சொற்கேட்டலும்
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே
அல்லும் நன்பகலும் இடையீடின்றி
நல்கி என்னை விடான் நம்பி நம்பியே (1-10-8)

என்று ஆழ்வர் மீளவும் வியப்பெய்திப் பாசுரமிடுகிறார்.

"செல்வ நாரணன்" என்ற சொற்கேட்டலும் மல்கும் கண்பனி நாடுவன் மாயமே" என்பதில் ஆழ்வாரின் வியப்பு பளிச்சிடுகிறது. இங்கே, 'செல்வநாரணன்' என்ற திருநாமத்தை யார் எவ்விடத்துச் சொன்னார், ஆழ்வார் எவ்வாறு செவியுற்றார்? என்ற வினாக்கள் எழுமன்றோ? அவற்றிற்கெல்லாம் விடையிறுப்பதற்காகப் பிள்ளை அரியதேர் பின்புலத்தைப் படைத்து மொழிகிறார். அவருடைய திருவாக்காகவே ஈண்டுக் காட்டுகிறோம்.

"நாம் இதுக்கு முன்பு நினைத்தும் பேசியும் தப்பச் செய்தோம், இனித் தவிரும் இத்தனை" என்று 'அவன் குணங்கள் நடையாடாத தோரிடத்திலே கிடக்கவேணும் என்று போய் ஒரு குட்டிச் சுவரிலே முட்டாக்கிட்டுக் கொண்டு கிடந்தார். அங்கே வழிபோகிறான் ஒருவன் சுமை கனத்து 'ஸ்ரீமந் நாராயணன்' என்றான். அச் சொல்லைக் கேட்டுத் தம்முடைய கரணங்கள் அங்கே ப்ரவணமாகிறபடியைக் கண்டு

விஸ்மிதராகிறார்.'' (ப்ரவணமாதல் - ஈடுபடல், விஸ்மிதம் - வியப்பு)

சுமை சுமப்பானும் நடை தளர்ந்த போது வேறு பெயர்களைச் சொல்லாது 'ஸ்ரீமந் நாராயணன்' என்று கூறியதும் அவன் உணர்ந்து கூறினபடியன்று, அருகில் ஆழ்வார் உளராதலால் எவர் நினைப்பினும் அந்நினைவின் முன்னிற்பவன் திருமாலே என்பதும் அறியப்படுகிறது.

உரையாசிரியர் இவ்விடத்து ஆழ்வாராக மாறி அவருடைய மனப்பயணங்களைத் தாம் நுகர்ந்து வெளிப்படுத்திய நிலையைக் காண முடிகிறது.

## கற்பனை உரையாடல் – அன்றும் இன்றும்.

திருவாய் மொழியை முடிக்கும் தறுவாயில் ஆழ்வார் தம்மிடத்து எம்பெருமான் இப்போது மிகவும் விருப்பம் செய்வது கண்டு முன்னர்த் தம்மை அகல்வித்து இப்போது விருப்புறுதற்குக் காரணம் வினவி, இறைவன் கூறமாட்டாது நிற்கும் அவனது திறத்தை வியப்புற்றுப் பேசி வருகிறார். அவ்வாறு பேசி வருங்கால்,

இன்று என்னைப் பொருளாக்கித் தன்னை என்னுள் வைத்தான்
அன்று என்னைப் புறம் போகப்புணர்த்தது என்செய்வான்?
குன்றென்னத் திகழ் மாடங்கள் சூழ் திருப்பேரான்
ஒன்றெனக்கருள் செய்ய உணர்த்தலுற்றேன் (10-8-9)

என்ற பாசுரத்தில் ஆழ்வார் தம்மை முன்பு கைவிட்டதற்குக் காரணத்தையோ அன்றி இப்போது தம்மை ஏற்றுக் கொண்டதற்குக் காரணத்தையோ ஒரு மறுமாற்றமாகக் கூறியருள வேண்டும் என்று இறைவனிடத்து உணர்த்தினார்.

உடனே அடுத்த பாசுரத்தில்,

உற்றேன் உகந்து பணிசெய்து உனபாதம்
பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்! (10-8-10)

என்று மனத்தின்கண் ஆறுதலடைகிறார்.

இதற்கு இடையில் ஆழ்வாரை ஆற்றுவிக்க இறைவன் நிகழ்த்திய நீண்ட உரையாடலைத் தடைவிடைகளுடன் உரையாசிரியர் நம்பிள்ளை அமைத்துக் காட்டுகிறார். இவையாவும் ஆழ்வார் நெஞ்சகத்தில்'' அரும்பியவை, பாசுரங்களாக மலராதவை. அவற்றையும் ஆழ்வாராக உருமாறிக் கண்டு உணர்ந்து பாசுரங்களை இணைக்கிறார் உரையாசிரியர்.

அவ்வுரையாடலின் போக்குப் பின்வருமாறு அமைகிறது:-

**ஆழ்வார்** - பிரானே, அறிவற்றதோர் பொருளுக்குச் சமமாகக் கிடந்த என்னை இன்று நீ ஒரு பொருட்டாகக் கருதி உன்னையே எனக்குள் முழுமையாக வைத்தாய், ஆனால் உன் திருவருளைப் பெறாத அன்று என்னைக் கைவிட்டிருந்தாய். அன்று கைவிட்டது ஏன்? இன்று என்னைப் பொருளாக்கி எனக்குள் புகுந்தது ஏன்? இவ்விரண்டில் ஒன்றிற்குக் காரணத்தை நீ சொல்லியருள வேண்டும்.

**இறைவன்** - இதற்குக் காரணத்தை நாம் சொல்ல வேண்டுமோ? நீரே அறியீரோ?

**ஆழ்வார்** - அடியேன் அறியேன் ; முற்றறிவினரான தேவரீரே அருளிச் செய்யவேணும்.

**இறைவன்** - ஆனால், நாம் உம்முடைய நெஞ்சிலே புகுந்தபோது உடன்பட்டு இருந்தீரே! அதனாலே காணும் உம்மை இன்று அங்கீகரித்தோம்.

**ஆழ்வார்** - அப்படியொன்றுமில்லை. யானொட்டி (இசைந்து) என்னுள் இருத்துவம் என்றிலன். தேவரீர்தாமே ஒட்டி (சங்கற்பித்து) என்னெஞ்சுள் புகுந்தீர்.

**இறைவன்** - அப்படிப் புகுந்த பின்பாகிலும் எம்மை விரும்பினீர் அன்றோ! அதனால் அங்கீகரித்தோம்.

**ஆழ்வார்** - பிரானே! உன்னை விரும்பித்தொழும் மனமும் நீ தந்தது அன்றோ!

**இறைவன்** - அப்படியானால், நம்மை விரும்புகிறபோது நம்மோடு கூட வேறு விஷயங்களையும் விரும்பாதிருந்தீரே அதனால் அங்கீகரித்தோம்.

**ஆழ்வார்** - பிரானே ! "என்னை தீ மனம் கெடுத்தாய்!" என்கிறபடியே உலகியல் செய்திகளில் மனமானது மறுவிவிடாதபடி செய்ததும் நீ அன்றோ!

**இறைவன்** - இவை ஒன்றுமில்லையானாலும் நாம் அருளிய மதிநலத்தை வளர்த்துக் கொண்டீர் அன்றோ! அதனால் உம்மை அங்கீகரித்தோம்.

**ஆழ்வார்** - பிரானே, 'காதல் கடல்புரைய விளைவித்தகாரமர் மேனி நம் கண்ணன்' என்கிறபடியே அந்த மதிநலத்தையும் வளர்த்தது உன் செயலன்றோ?

இதற்கு மேல் இறைவனால் பதிலிறுக்க இயலவில்லை. நாணம் மிக்கவனாய்க் காலாலே தரையைக் கீறிக் கொண்டு நின்றான். இறுதியாக ஆழ்வாரைப் பார்த்து,

**இறைவன்** - ஆழ்வீர், நீர் பெற வேண்டிய பேற்றைப் பெற்றுவிட்டீர்; அதுவே போராதோ! அதனை நுகராதே அப்பேறு வந்த வழியை ஏன் ஆராய வேண்டும்? தேங்காய்க்குள் இளநீர் புகுந்த வழியை ஆராய்ந்த பிறகா விடாய்த்தவன் குடிப்பான்?

இவ்வாறு கூறியதும் ஆழ்வார் சமாதானம் அடைந்தார்.

உற்றேன் உகந்து பணிசெய்து உனபாதம்
பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்!

என்று கூறி மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

இவ்வுரையாடலை அமைக்க ஆழ்வாருடைய பாசுரத் தொடர்களையே பற்றாசாகக் கொள்கிறார் உரையாசிரியர்.

ஆழ்வார்களின் அருட்பாடல்களில் இத்தகைய உரையாடல்கள் பொதிந்திருக்கும்!

# வாழ்க்கை நெறி

*சிந்தனையாளர் டாக்டர் கி. இளங்கோவன்*
*முன்னாள் முதுகலை தமிழ்த்துறைத் தலைவர்,*
*அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*

உண்மையும் தெய்வமும் இந்திய மரபில் ஒன்றுதானே. சத்தியம் என்ற சொல்லே சத்து என்பதிலிருந்து வருவதுதான். சத்து என்பது கடவுள். எது கடவுளின் இயல்போ அது சத்தியம். இறைவர் செய்தவை அனைத்தும் சத்தியமே.

பக்தர்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளை இறைவன் மிக எளிதாகத் தீர்த்து வைப்பார். இன்று தான் நமக்கு அன்றாடம் எவ்வளவு பிரச்சனைகள்! ஆனால் அவர் திருவடியில் தலைப்பட்டவர்க்கு மலைபோல் வருவது பணிபோல் விலகும் 'எழு முயற்சி செய்! காலில் சுறுசுறுப்பும், உள்ளத்தில் உற்சாகமும், செயலில் நம்பிக்கையும் கொண்டு செயல்படு'' என்று அறை கூவினார் இறைவன்.

இறைவன் தம்மை வழிபடுவோர் இதயத்துக்கு எல்லாம் ஆறுதல் அளிக்கிறார். அவர் தம் அருள் விலாசம் நமக்கெல்லாம் பசிக்கு விருந்து; நோய்க்கு மருந்து, ஆம் ஆன்மப் பசிக்கு விருந்து; பிறவி நோய்க்கு மருந்து.

வாழ்க்கையின் தொல்லைகளையும் துன்பங்களையும் இறைவன் மறுக்கவில்லை. ஆனால் இறைவன் அருளால் அவற்றைப் போக்க முடியும். வாழ்வின் மையம் இறைவனே.

இரவு வந்தால் பகலும் வருமன்றோ! அதுபோல் துன்பம் வந்தால் இன்பமும் வரும் என்பது தெளிவு. நமக்குப் பிடிக்காமல் போனாலும் நாம் எதிர்கொள்ள வேண்டியவை வாழ்க்கையில் இரண்டு. அவை துயரம், மரணம் ஆகியவை. மரணம் என்பது பெருந்துயரம், அது மீளாத்துயில். அது

கூட இறை பக்தருக்குத் துயரம் தராது; மற்றொரு வீட்டிற்கு வாயிலாக அது அமைவதை உணர்த்துகிறார் இறைவன்.

வாழ்க்கை முழுவதும் நாராயணனின் லீலை என்பதை உணரும் போது அது அர்த்தமுடையது ஆகிறது. ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்ற பாவையும் இங்கே சிந்திக்கத் தக்கது. அவனைச் சரண் அடையும் போது வாழ்வில் இதுவரைத் தடையாக விளங்கியவையே இனிச் சாதகமாக மாறிவிடும். இது பக்தர் அனுபவம். ஆம் வாழ்வின் போக்கே மாறிவிடுவிறது.

இறைவன் வாழ்வில் செய்த செயல்களை நோக்குங்கள் ஒன்று புரியும். அது என்ன தெரியுமா? நமக்கு விடுதலை தருவதே அவர் நோக்கம். விடுதலையை முத்தி, மோட்சம் என்றெல்லாம் கூறுவர். முதலில் அறியாமையிலிருந்து விடுதலை தருவார். பின் வாழ்வின் துன்பங்களிலிருந்து விடுதலை தருவார். இறுதியில் பிறவியிலிருந்து விடுதலை தருவார். இந்தியச் சமய ஞானியர் எல்லோரும் விடுதலை தருவதையே நோக்கமாகக் கொண்டவர்கள்.

இறைவன் அருளை வாரி வழங்குவதில் வள்ளல். அருட்பாதையில் நம்மை ஆற்றுப்படுத்தவும் செய்கிறார் அவர். நாம் அவர் உதவியை நாடும் போது வழித்துணையாக விளங்குகிறார். நம்வினையை அவர் சுமக்கிறார். ஆனால் ஒன்றை மட்டும் அவர் வலியுறுத்துவார். ''வாழ்க்கை என்பது வெறும் சுகபோக நிலையமாக மாறிவிடக் கூடாது. உலகில் இன்பப் பெறுதலே நோக்கமாக அமைதல் கூடாது. ஆன்மீக வழியில் எளிய வாழ்க்கை வாழுதலே பொருத்தமானது பிறருக்காக வாழும் தியாக வாழ்க்கையே சிறந்தது தொண்டும் தியாகமும் வாழ்க்கையின் நோக்கங்களாக அமைதல் வேண்டும். இறைவனிடம் ஆழ்ந்த ஈடுபாடு ஏற்படும் போது இவையிரண்டும் தாமாகவே நம்மிடம் விளங்கும்.''

இன்று நாம் நடத்துவதோ அறிவுப்பூர்வமான வாழ்க்கை வெறும் அறிவு மட்டும் பிரச்சனைகளைத் தீர்க்காது. சில சமயம் அறிவே சிக்கல்களை உருவாக்கவும் செய்யும். எனவே தான் இறைவன் கூறுகிறார். "உங்கள் இதயத்தைத் திறங்கள், பூட்டிக்கிடக்கும் அதன் கதவுகளை நன்றாகத் திறந்து வையுங்கள். அப்பொழுதுதான் இறைவன் உள்ளே வருவான் இதயமே இறைவனது இருப்பிடம் இதயத்தில் இறையுணர்வு மலர்ந்தால் வாழ்க்கையில் மலர்ச்சி ஏற்படும். பின் வாழ்க்கையின் நோக்கம் புரியும்."

ஆமாம் இங்கு வாழ்க்கையின் நோக்கம் என்று அவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

உண்மையான ஆனந்தத்தையே தியாகத்தின் அடிப்படையில் அமையும் ஆனந்தமே சிறந்தது. மெழுகு உருகினால் ஒளி விளங்குவதைப் போலத் தியாக வாழ்க்கை முழுமையையும் மன நிறைவையும் தரும் இறைவன் வாழ்க்கையே இதற்குச் சான்று பகரும். ஆகவே, தியாக வாழ்க்கை வாழ்வோம். இறைவன் திருவருளைப் பெறுவோம். "மூல பண்டாரம் வழங்குகிறான் வந்து முந்துமினே" என்று மணிவாசகர் கூறியதைப் போன்று இறைவன் நம்மை அழைக்கிறார். நாம் அவர் அழைப்பை ஏற்போமே. தியாகம் செய்தால் திருவருள் தானே கிடைக்கும்.

மக்கள் சமுதாயத்திற்கு விழிப்பூட்டி விடுதலை தர வந்தவர் தாம் இறைவன். அவரது பெயரே இதை உணர்த்தும் இறைவன் அருளால் எல்லாம் சாத்தியமே என்பதைப் பறைசாற்றுகிறது அவர் தம் புனித வாழ்வு.

தன் முயற்சி பயனளிக்காத போது இறைவனிடமும் தனது வேண்டுகோளை வைக்கிறான் மனிதன். மனிதனிடம் நம்பிக்கை குறையும் போது இறைவனிடம் பக்தி வளர்கிறது. நம் பிரச்சனைகளை அவனே தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை மலர்கிறது. இவ்வாறு இறைவனிடம் கொள்ளும் நம்பிக்கையே

பக்தி வளர அடிப்படையாகிறது. அப்பொழுது நம் பற்றுக் கோடும் மாறுகிறது. இதுவரை உலகப் பொருள்களில் காலூன்றி நின்ற நாம், இறையருளைப் பற்றி நிற்கத் தொடங்குகிறோம். அப்பொழுது வாழ்க்கையின் போக்கே மாறிவிடுகிறது.

நம்முடைய எதிர்பார்ப்பு குறையத் தொடங்குகிறது. எச்செயலைச் செய்தாலும் ஏதாவது பயனை எதிர்பார்த்து நிற்கும் போக்கு மெல்ல மறைகிறது. எல்லாமே இறைவன் அருள்படி நடக்கிறது என்ற நம்பிக்கையை நம்முள் விதைத்துக் கொள்கிறோம். " நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று எல்லாவற்றையும் இறைவனிடம் விட்டு விடுகிறோம். கீதை சிறப்பித்து இச்செயலையே கூறுகிறது. "இறைவனிடம் பற்றுக் கொண்டால், தானாகவே செய்யும் செயலின் பயனில் ஆர்வம் நீங்கிப் போகும். எல்லாவற்றையும் ஏற்கும் மனப்பாங்கு உண்டாகும். இதனால் அமைதி கிட்டும்." ஆம் அவர் கூற்று எவ்வளவு உண்மை! செயலில் பயனை எதிர் நோக்கும் போது அது கிடைக்காதபோது, வெறும் ஏமாற்றம்! அதனால் அமைதியின்மை. ஆனால் "செயல் செயலுக்காகவே" என்று கடமையாற்றும் போது ஏமாற்றத்திற்கு இடமே இல்லை. இவ்வாறு செய்யும் போது வாழ்வில் புதிய மலர்ச்சி ஏற்படுகிறது. இறைவன் குறிப்பிடும் பக்தி இத்தகையதே.

நம்மை முழுதும் இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். அவனுக்கே பணிசெய்ய வேண்டும் என்கிறது கீதை. இறைவனுக்குச் செய்யும் தொண்டு கைங்கரியம் எனப்படும். அதைத் திருத்தொண்டு என்று கூறலாம். திருமாலே இறைவன் என்பது மத்துவர் கோட்பாடு. அவனை ஹரி என்பர். மத்துவர் வழி வந்த ராகவேந்திரரும் "மதுர மிக்க ஹரியே" நமக்குப் பற்றுக் கோடு என்று கூறுகிறார். ஆனால் இறைவனிடம்

எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்துவிட்டு நோக்கும் போது நமது அணுகுமுறையே மாறிவிடும். எல்லாச் செயலுக்கும் கர்த்தா (செய்பவன்) இறைவனே என்றும், நாம் அவனிடத்து உள்ள வெறும் கருவியே என்பதும் புலப்படும். இறைவனிடம் பக்தி கொள்வதால் நம் வாழ்க்கையில் ஏற்படும் முக்கியமான விளைவு இது.

அப்பொழுது இறைவனிடம் நாம் கொள்ளும் பக்தி கூட பெருமாற்றம் அடையும். இறைவனிடம் பொன்னும் பொருளும் வேண்டும் நிலை மாறி, அவனது அருளை நாடி நிற்கும் நிலை ஏற்படும். நாம் இறைவனிடம் காட்டுவது பக்தி. பக்தி என்பது தூய அன்பின் வடிவினது. இறைவன் நம்மிடம் காட்டுவது அருள். நம் அன்பு முழுமை பெறுமானால், நம்மிடத்து இறைவன் காட்டும் அருளும் முழுமையாக நிகழும். அது சரி, பக்தி முழுமை பெறுவது எப்பொழுது! அவனைச் சரணடையும் போது, சரண் அடைதல் என்றால் என்ன? ''இறைவனே, உன் கையில் நான் வெறும் கருவி நீயே எல்லாவற்றையும் செய்கிறாய். நீ ஆட்டுகிறாய், நான் ஆடுகிறேன். செயலை நான் செய்யவில்லை. நீ தூண்ட நான் செய்கிறேன். அதாவது நான் செய்யவில்லை. வெறுமனே செயல்படுகிறேன். நீ செலுத்துகிறாய், நான் செய்கிறேன்'' என்பதே சரணாகதி.

''பகுத்தறிவால் எதையும் சட்டென்று முடிவுகட்டி விடாதீர்கள். அருளின் கண் கொண்டு நோக்குங்கள். அப்பொழுது தான் உண்மை புரியும்.'' சரி, அருள் என்பது என்ன? இறைவனது சக்தி உலகில் எல்லாவற்றையும் ஒன்று சேர்க்கும் சக்தி. தூய அருளின் வெளிப்பாடாகவே அமைந்தது இறைவனது வாழ்க்கை. தீர்க்க முடியாத பல பிரச்சனைகளை அருளால் தீர்க்க முடியும் என்பதைப் பறை சாற்றியது இறைவனது வாழ்வு.

பக்தியும் ஞானமும் நமக்கு இரு சிறகுகளாக அமைதல் வேண்டும். இவை இரண்டும் சிறகுகளாக அமைவதால்தான்

ஞானியைப் பெரும் பறவை என்றனர். இறைவனை வழிபட பக்தி, அவனை உணர ஞானம். இரண்டும் உடையவே சமுதாயத்திற்கு உண்மையில் தொண்டு புரிய முடியும் என்பது உபதேசம்.

விடுதலையே வாழ்வின் நோக்கம். ஆன்மிக விடுதலையே முழுமையானது. அதனை முத்தி என்பர். நமக்கெல்லாம் முத்தி தரவே இறைவன் இவ்வுலகிற்கு வந்தார். நம் வினை முழுவதும் நீங்கும் போது விடுதலை கிட்டும். நம் வினைகளை இறைவன் போக்குகிறார். துன்பத்திற்கான வினையே அவர் நீக்கும் போது துன்பத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. கடவுளை வழிபடுவதால் தீவினை நீங்கும் நல்வினை கிடைக்கும். அதாவது பாவம் நீங்கும், புண்ணியம் பெருகும், புண்ணியத்தால் பாவத்தைப் போக்கும் வழியை எளிமையாக உபதேசித்தார்கள் இறையடியார்கள்.

பக்தர் துன்பத்தைக் களைதல் குருவின் கடமையாகிறது நம்மைத் தயார் செய்து இறைபணியில் ஈடுபடச் செய்வது அவரது தனித்திறன். அதாவது அவர் நம்மை இறைவனிடம் ஆற்றுப்படுத்துகிறார். இறையருள் நம்மீது பதிய அவர் பெரிதும் துணை செய்கிறார். விரிந்து பரவும் சூரிய ஒளி பூதக்கண்ணாடியின் வழியே குவிந்து படரும் போது, அதன் கீழ் வைக்கப்பட்ட பொருள் பற்றி எரிகிறது இல்லையா அதுபோன்று இறைவன் அருள் குருவின் மூலம் நம்மீது குவிந்து பதியும் போது நம்வினைகள் தீயினில் தூசாகும்.

**பக்தர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.**

அ. துன்பம் வரும்போது இறைவனை வழிபடுபவர் முதல் வகை

ஆ. உலகியல் வாழ்வில் சுகங்களை வேண்டி நிற்பவர் அடுத்தவகை

இ. ஞானத்தில் நாட்டமுற்று இறைவனை நாடுதல் மூன்றாம் வகை.

நம்மில் பெரும்பாலோர் துன்பம் வரும்போது மட்டுமே )றைவனை நினைக்கிறோம். கஷ்டம் வரும்போது வாய் )றைவன் பெயரை முணுமுணுக்கிறது. வந்த கஷ்டம் நீங்கும் பாது இறைவனை மறந்துவிடுகிறோம். இது அவ்வளவு ரியில்லை. ஆனால் பக்தி வருவதற்கு இது ஒரு காரணமாக மைவதால் இதை ஏற்றுக் கொள்கிறார்கள். நோய் வருகிறது, ாக்டரும் கைவிரிக்கிறார். இறுதியில் இறைவனிடம் சென்று மறையிடுகிறோம். இது பக்தியின் முதல்நிலை. பெரும்பாலோர் இறைவனிடம் பக்தி கொள்ளுவது இப்படித்தான். பகவத்கீதை இவ்வகை மக்களை ஆர்த்தன் ன்று அழைக்கிறது.

உலகியல் வாழ்வு சிறக்க வேண்டி இறைவனை பழிபடுவது இரண்டாவது வகை. அவர்கள் மூலம் நாட்டில் பக்தி பரவுமானால் இவ்வகையும் ஏற்கக்கூடியதே.

ஞானத்தில் ஈடுபாடு பெருக இறைவனிடம் ஞானத்தை வேண்டி நிற்பது மூன்றாவது வகை. இவ்வகையினரே இறைவனை முழுவதும் புரிந்து கொள்ள முடியும். உண்மையை உணர்தல் ஞானம். இறைவனே உண்மை என்பது ஞானம். வாழ்வின் அடிப்படையை உணர்ந்து இறைவனையே சிக்கெனத் தொடர்ந்து பற்றும் போது இது விளைகிறது. ஞானமே உண்மையான மலர்ச்சி.

ஆக, இறைவனே நம் வாழ்வின் மையம் அவனருள் பிரச்சினைகளைத் தீர்த்து உரிய வழிகாட்டும் என்பதே நமக்கு உணர்த்தும் வாழ்க்கை நெறியாகும்.

# அருட் கவி கு.செ.இராமசாமியின் அம்மன் பாடல்கள்.

*பேராசிரியர் பழ. முத்துவீரப்ப*
*அண்ணாமலைப் பல்கலைக்கழக*

**முன்னுரை..**

தாய்த் தெய்வ வழிபாடு மிகவும் தொன்மையானது தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு ஏனைய உறவுகளை விட நெருக்கமும் உருக்கமும் வாய்ந்தது என்பது அனைவரு அறிந்ததே. எல்லாம் வல்ல முழுமுதற்பொருளான இறைவனின் திருவருளைச் சக்தி என்பர். தன்னளவில் சிவன் என்று கூறப்படும் இறை உயிர்கட்குஅருள் புரியும் நிலையில் சக்தி எனப்படுகிறது. இதனை நிலவும் ஒளியும் போலஎன விளக்கலாம். அசைவற்றிருப்பது சிவம். செயல்புரிவதுசக்தி சக்தியின்றி சிவமில்லை என்பது முதுமொழி. சக்தியும் சிவமும் ஒருங்கிணைந்த நிலையை அம்மையப்பர் எனச் சைவசமயமும் இலட்சுமிநாராயணன் என வைணவ சமயமும் போற்றி வருகின்றன. அம்மையையே முழுமுதற் பொருளாகப் போற்றி வழிபடும் சாக்தம் என்னும் சமயம் பிற்கால வளர்ச்சியாகும்.

அம்மையின் தோற்றமும் ஏற்றமும் குறித்து நூற்றுக்கணக்கான நூல்கள் 20ஆம் நூற்றாண்டில் எழுந்துள்ளன. அந்தாதி, பள்ளியெழுச்சி, பாவை, பிள்ளைத்தமிழ், மாலை, பதிகம் எனப் பல்வேறு சிற்றிலக்கியங்களாகவும் தனிப்பாடல்களாகவும் இசைப்பாடல்களாகவும் பல்லாயிரக் கணக்கான பாடல்கள் அம்மன் சிறப்பினைச் சித்தரித்துள்ளன. இந்நூல்கள் அனைத்திலும் அம்மன் எவ்வாறு போற்றப்பட்டுள்ளாள் என்பதை இச்சிறு கட்டுரையில் எடுத்துக்காட்டுவது என்பது சின்னச்சிறு சிமிழுக்குள் கடல் நீரை அடக்குவதற்கு ஒப்பானதாகும். எனவே பொது நிலையில் குறிப்பிடத்தக்க சில செய்திகள் மட்டும் இங்கு விளக்கப்படுகின்றன.

**சக்தி ஒன்றா பலவா?**

சக்தி ஒன்று தான். அது செயல்படும் வகையில் லவகைப்படும்.எடுத்துக்காட்டாக மின்சக்தி ஒன்றுதான் அது டுப்பில் செயல்படும் போது வெப்பசக்தி எனப்படும். விளக்கில் சயல்படும் போது ஒளிசக்தி எனப்படும். வானொலியில் சயல்படும் போது ஒலிசக்தி எனப்படும். மின்சார இரயில்களில் சயல்படும் போதுஇயங்கு சக்தி எனப்படும். இதனால் )றைவனது சக்தி ஒன்று தான் என உணரலாம். ஒன்றான அச்சக்தி )றைவன் சொரூப நிலையில் இருக்கும் போது பராசக்தி னப்படும். உலகத்தை நோக்கத் தொடங்கும் நிலையில் ஆதிசக்தி னப்படும். திரோதான சக்தி என்றும் இது புழங்கப்படும்.பராசக்தியின் ஒரு சிறு கூறே ஆதிசக்தி ஆகும்.பராசக்தியில் ஆயிரத்தில் ஒரு கூறு ஆதிசக்தி என்று கூறுதல்சைவ மரபு. ஆதிசக்தி இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி ன மூன்றாகச்செயற்படும்.

உயிர்களாகிய நாம் ஒரு காரியத்தைச் செய்ய ஆசைப்படுகிறோம். அதற்குரிய வழிகளை அறிவால் திட்டமிடுகிறோம் பின் செயற்படுத்துகிறோம்.இச்சை ஞானம் கிரியை என்பது இதுவே.உயிர்களிடத்து உள்ள இச்சக்திகளுக்கு மூலமாக இறைவனிடத்து உள்ள சக்திகள் அமைகின்றன. இவற்றை இச்சாசக்தி ஞானசக்தி கிரியாசக்தி என்பர். இவற்றைத் தீவிர விருப்பம் தெளிந்த அறிவு செயல் திறன் என விளக்கலாம்.இம் மூன்றின் குறியீடே சக்தி அன்பர் வணங்கும் முக்கோண வடிவாகும். அம்மையை மந்திர தந்திர யந்திரங்கள் மூலம் வழிபடுவது இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் (வங்கம்) அதிகம் பின்பற்றப்பட்டது. இது வாமாசாரம் எனப்பட்டது தென்னாட்டில் சக்தி வழிபாடு தட்சிணாகாரம் எனப்பட்டது இது வேதங்களுக்கு முதன்மை கொடுத்து வணங்கும் வழிபாடு ஆறு கடமைகளைக் கடைப்பிடிக்கச் செய்வது பெரும்பாலும் தென்னாட்டு முறையை யொட்டியே பாடல்கள் நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

## அம்மை-ஆயிரம் பெயர்கள் ஆயிரம் நூல்கள்

சக்தியின் வடிவான அம்மையைக் கலைகளின் வடிவமாக-

(கலைமகள்) வீரத்தின் உருவமாக - (மலைமகள்) செல்வத்தி விளக்கமாகக்-(திருமகள்) காண்பர் தமிழர் மதுரை மீனாட்சி தில்லை சிவகாமி காஞ்சி காமாட்சி நெல்லை கோமதி திருக்கடையூ அபிராமி என்றெல்லாம் பெருந்தெய்வமாகப் போற்றப்படு அம்மை மாரியம்மன் காளியம்மன் பொன்னியம்ம துர்க்கையம்மன் நாகத்தம்மன் முத்துமாரி பத்ரகாளி உருத்ரகா கண்ணுடைய நாயகி ஆயிரம் கண்ணுடையாள் கொப்புடையம்ம நற்கனியம்மன் என எண்ணிறந்த பெயர்களில் சிறு தெய்வமாகவு துதிக்கப்பட்டு வருகிறாள் பெயர்கள் பலவாயினும் சக்தி ஒன்று என உணர வேண்டும்.

வன்மை அறிவு ஆற்றல் என்ற வன்மைப் பண்புகளும் அரு தாய்மை மென்மை என்ற மென்மைப் பண்புகளு ஒருங்கிணைந்தவள் அம்மை நெடுந்தொலைவி விலகிநிற்பவர்களுக்கும் அருள் பாலிப்பவள் என்பதை அருள்நிறைந்த கொழுந்து மணக்கும் தருவாகும் தேவி என்கிறது புவனேசுவரி அந்தாதி

## அம்மை புனையப் பட்டுள்ள முறை

அம்மையின் அழகுத் தோற்றம் பேராற்றல் புராணச் செய்திகள் அடியார்இயல்பு அன்னையின் இயல்பு அன்பர்களுக்கு அருளும்திறம் திருநாமச் சிறப்பு திருவடிச் சிறப்பு முதலியன பாடும் புலவர்க்கேற்பச் தத்துவச் செறிவோடும் தாயன்பு போல நெகிழ்வோடும் வரையப்பட்டுள்ளன கனிவைக் காட்டும்வெண்ணிறமும் கடுமை காட்டும் கருமை நிறமும் அம்மையின் நிறங்களாகச் சித்திரிக்கப்படுகிறது.

அந்தாதி நூல்களில் சில அபிராமி அந்தாதியையும் பிள்ளைத்தமிழ் நூல்களில்சில குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழையும் பராசக்தி குறித்த துதிப்பாடல்கள் பாரதியார் பராசக்திப் பாடல்களையும் அடியொற்றி எழுந்துள்ளன எனலாம்.

## மகுடம் அமைத்துப் பாடுதல்

நூல் முழுவதும் இறுதியடியோ அல்லது அதில் பாதியடியோ

ஒரே அடியாக அமையப் பாடுவதை மகுடம் அமைத்து பாடுவது என்பர் இடைக்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற இம் மரபு இக்காலத் தனிப்பாடல்களிலும் பதிகங்களிலும் (10 பாடல் கொண்டது) பிள்ளைத் தமிழ் நுல்களிலும் ஆர்வத்தோடு பின்பற்றப் பட்டுள்ளது (எ.டு) இறைவி எனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வரி இமயமலை வாழும் உமையே.

## தலச்சிறப்பும் நூலாக்கமும்

காலந்தோறும் மக்களின் மனப்போக்கிற்கேற்ப வெவ்வேறு தலங்களில் வெவ்வேறு பெயர்களில் அம்மன் புகழ் பெற்றுத் திகழ்கிறாள். மாங்காடு காமாட்சி மேல்மருத்துவர் ஆதிபராசக்தி ஆலந்தூர் வேம்புலி அம்மன் முதலியதலங்கள் சான்று. இத்தெய்வங்களைப் போற்றிப் பல்வேறு அந்தாதி பதிகங்கள் எழுந்துள்ளன.

## யாப்பு முறை

அந்தாதி நூல்கள் கட்டளைக் கலித்துறை வெண்பா ஆகிய யாப்புகளிலும் பிள்ளைத்தமிழ் பதிகம் பள்ளியெழுச்சி முதலியவை விருத்தம், வெண்பா ஆசிரியப்பா ஆகிய யாப்புகளிலும் பாதயாத்திரை கருதிப் பாடப்பட்டவை துள்ளிச் செல்லும் விருத்தங்களிலும் தனிப்பாடல்கள் பல இயைபுத்தொடை அமைந்த இசைப்பாடல்களாகவும் ஆக்கப்பட்டுள்ளன.

## பாடிய புலவர்கள்

இருபதாம் நூற்றாண்டின் மகாகவிஞன்பாரதி கவிஞர் ச.து.சு.யோகியார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கவியரசர் கண்ணதாசன் கவிஞர் கனகராசையர் புலவர் மா.அமுதலிங்கனார் அருட்கவிஞர் கு.செ.இராமசாமி முதலிய புகழ் பெற்ற கவிஞர்கள் பலர் அம்மன் புகழ் பாடியுள்ளனர். ஈண்டு அருட் கவிஞர் கு.செ.இராமசாமியின் கவிதைகள் ஆய்வுக்குரிய பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

# அருட்கவி கு.செ. இராமசாமியின் அம்மன் பாடல்கள்

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அம்மனை பற்றிச் சொல்லழகும் பொருளழகும் ததும்பப் பாட புனைந்தவர்களுள் தலைமை இடம்பெறுபவர் கு.செ.இராமசா அந்தாதி பதிகம் மாலை தனிப்பாடல்கள் எனப் பலநூறு பாடல்க பாடியுள்ளார் இவற்றுள் ஸ்ரீராஜராஜேசுவரி பாடல்க திருவெற்றியூர் பாகம் பிரியாள் அம்மைப் பற்றிப் பாடிய பூபாள திருப்பெருந்துறை சிவயோக நாயகி அந்தாதி ஆகிய பாடல்க பக்தர்களால் விரும்பிப் போற்றப்படும் பாடல்களாகும் அனைத்து பாடல்களிலும் அம்பிகையோடு ஒரு அந்நியோன்ய பாவம் (தா பிள்ளை உரிமை) புலப்படுகிறது யோக வேதாந்தக் கருத்துக்களு இடம் பெற்றுள்ளன வெளியீட்டு முறை உயிர்த் துடிப்புட உள்ளது.

## ஸ்ரீராஜராஜேசுவரி பாடல்கள்

சிவசக்தி ஐக்கிய சொரூபமான ராஜராஜேசுவரியை முழுமுத தெய்வமாகக் கொண்டு 48 விருத்தப் பாடல்கள் பாடியுள்ளார் பாடல்க அனைத்தும் "இறைவி எனை ஆண்டருளும் இராஜராஜேஸ்வ இமயமலை வாழும் உமையே" என மகுடம் பெறுகின்ற அம்மையின் மேனி நிறம் தோற்றச் சிறப்பு (பா.3) மறக்கருணை (பா.6 பல்வேறு பெயர்கள் (பா.11 12) சப்த மாதராக விளங்கும் நிலை (பா.22) மூவகைச் சக்தியாகவும் விளங்கும் சிறப்பு (பா.27) பிரம என்னும் உண்மை (பா.29) திருவிளையாடல்கள் (பா.31) அறம் வளர்க்கு ஆற்றல் (பா.36) அவருக்கே ஆட்பட்ட தன் அடிமைத் திறம் (பா.30 ஆகியவற்றை அற்புதமாக விவரித்துள்ளார்.

## பரத்துவம்

அம்மையின் பரத்துவச் சிறப்பை

"மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் மேலான
முதல்விமுக் கண்ணி போற்றி" (பா. 10)

எனப் புலப்படுத்தியுள்ளார் மற்றொரு பாடலில் பொன்னாய் பொருளாய் புகழாய்போகமாய் புறமாய் அகமாய் புவியெங்கும்

ாணும் பொலிவாய் போதமாய் இருப்பதாய் வருணித்து

"முன்னும் நீ; நடுவும் நீ; முடிவும் நீ; முடிவிலா
முழுமை நீ; ஞானம் நீயே

என்று முதன்மையை விளக்கியுள்ளார் *(பா.13)*

மாரியாய் மேரியாய் மகமது நபிக்கருள் வந்த மாசக்தியாய் ்தங்கள்தொறும் வாழும் தெய்வம் நீ என்று புகழ்ந்து,

"ஓரிடம் ஒருகுணம் ஒரு நிலை ஓர் உருவம்
ஒரு பெயர் ஒருவிகற்பம்
ஒன்றும் இல்லாதபடி ஒவ்வொன்றும் தானாகி ..
உணர்வரிய பிரமம் நீயே" (பா.29)

என்று சக்தியே முழுமுதற் பொருள் என்று போற்றுகிறார். சமயங்கள் யாவிலும் அமைகின்ற உண்மை நீ சன்மார்க்க வள்ளல்தாய் நீ' எனப் புகழ்ந்துள்ளார்.

## 3மேனிவண்ணமும் உருவச்சிறப்பும்

அபிராமி அந்தாதியின் முதல் பாடல் அம்மையின் திருமேனிக்குமாணிக்கக்கல் மாதுளம்பூ குங்குமக் கலவை போன்ற செந்நிறப் பொருட்களை உவமை கூறுவதுபோல சிந்தூரம் குங்குமம் செவ்வானம் உதயக் கதிர் ஒளிமிகு மாணிக்கம் தாமரை பவழம் செம்பருத்திப் பூ இந்திரகோபம் (தம்பலப் பூச்சி) தேன் மான்மதம் (கஸ்தூரி) மாதுளம் மாதுளை முத்துக்கள் தீ ஆகிய பொருட்களை அம்மையின் அழகு வடிவத்திற்கு ஒப்பிடுகிறார் (பாடல்1) படிப்பவர் மனத்தில் அம்மனின் அழகுருவம் இடம்பெறும் வண்ணம்,

"நோக்கும் திசைதொறும் நூபுரத் தாள்களும் நூல்போல்
ஒசிந்த இடையும்

நொடிதோறும் நொடிதோறும் புதிதான எழில் கொள்ளும்
நுவலரிய திருமேனியும்

................ .............. ...............

காக்கும் கரங்களும் அங்குசம் பாசம் கரும்புவில் மலர்கள்
ஐந்தும்
கனிவாயில் மூரலும் கருணை பொழி விழிகளும்
கனகமணி ஒளிரு முடியும்
ஈர்க்கும் சுடர்விழியும் இருவழி களிப்பயாம் எங்கெங்கும்
காண அருள்வாய் (பா.

என ஓவியந் தீட்டியுள்ளார் பல்வேறு தலங்களில் பல்வே பெயர்களில்வீற்றிருக்கும் சிறப்பையும் (பா.4) கலைமகளாகவு திருமகளாகவும் பராசக்தியாகவும் விளங்கும் நிலையையும் (பா 6 7) போற்றிப் பரவியுள்ளார்

கலைமகளின் அழகுக் கோலத்தை

"பனிதங்கு நிலவுபோல் பால்போல் பளிங்கு போல்
பட்டொளி நிறைந்த வடிவும்
படிகமணி மாலையும் ஏடும் தரித்துயாழ் பயின்றருளும்
நான்கு கரமும்"

என வருணித்து அம்மையின் வெண்ணிற அழகுத் தோற்றத்தை பக்தர் உள்ளத்தில் பதிப்பதில் வெற்றி பெற்றுள்ளார்.

## மறக்கருணையும் அறக்கருணையும்

அசுர சக்திகளை அழித்த அம்மையின் அளப்பரிய ஆற்ற பல்வேறு புராணக்கதைகளில் விவரிக்கப் பட்டுள்ளது தே மகாத்மியம் என்னும் தலைப்பமைந்த பாடலொன்றில் பண்ட விடங்கன் விசுக்ரன் மதுகைடபன் மகிடன் சும்பநிசும்பர் நரக சண்டன் முண்டன் இரணியன் தக்கன் முதலானோரை வென்றவ என்று தொகுத்துச் சொல்லி அன்னையின் மறக்கருணையை போற்றியுள்ளார் அறக் கருணையும் பொருந்தியவள் என்பதை

"சேவிக்கும் அடியாரை வாழ்விக்கும் ஆசையால்
செங்கோல் பிடித்த அழகே"

என்று வருணித்திருப்பது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது

## அம்மையின் பெருமையும்
## அருள்புரியும் பண்பும்

20ஆம் பாடலில் அன்னையின் பெருமைகளைப் பலவாறு விவரிக்கிறார் ஆகம புராணங்கள் அடைவரிய தொடுவானம் கோடியோர் உயிர் பருகும் குலிசம் அவுணர்தம் கோட்டையில் விழுந்த கனல் குலமாதரின் மஞ்சளும் குங்குமமும் காக்கும் கோமள தெய்வ மலர் பிறவிக் கடல் கடக்க வரும் தோணி நோய் சாவு கவலை போக்கும் அருமருந்து என்றெல்லாம் வரும் உருவங்கள் அம்மையின் ஆற்றலையும் அருளையும் புலப்படுத்தி உவகை தருகின்றன.

> "இடையீடி லாதுதரும் மழைமேகமே/எம்
> இலக்காவ(து) உன் பாதமே"

என வேண்டுவது உள்ளத்தை உருக்குகிறது.

அவள் அருள் வழங்கும் சிறப்பை,

> "முடவர்க்குக் கால்தந்து குருடர்க்குக் கண்தந்து
> மூங்கைக்கும் மொழிகள் தந்து
> மும்மைமலம் அறுவித்துச்செம்மைநலம் உணர்வித்து
> முக்திதரும் சந்நிதானம் (பா.25)

எனப் புலப்படுத்துகிறார்.

கம்பனின் குற்றம் மறைக்கக் கொட்டிக்கிழங்கு விற்றாள் காளமேகத்தைக் கவிமேகம் ஆக்கினாள் அபிராமி பட்டருக்காகப் பகற்போதில் நிலவு தோற்றுவித்தார். வள்ளலார் பசிதீரச் சோறு தந்தார் குமரகுருபரர் முன் ஒளிநடை பயின்றார் என அம்மையின் அருள் விளையாடல்களை அடுக்கிச் சொல்லி மகிழ்கிறார்.

அடியார் சுமைகளைத் தம் தோளில் ஏற்பவள் (பா. 1) எனச் சிவயோக நாயகி அந்தாதியும் குறிப்பிடுகிறார்

## அனைத்துச் சக்தியும் அவள்

ஆதிசக்தியாக மூலசக்தியாக யோகசக்தியாக அன்னை விளங்குவதை ஒரு பாடலில் (பா.27) விவரித்துள்ளார் அபிராமி கௌமாரி மகேசுவரி நாராயணி இந்திராணி வராகி காளி என்னும் சப்தமாதர் செய்த அருஞ்செயல்களைச்சுருக்கமாகக் குறிப்பிட்டு இவர்கள் அனைவரும் தன் ஆணைவழி நிற்கப் பேரரசு புரிபவள் அம்மை (பா. 22) என்கிறார்.

தமிழிலும் வடமொழியிலும் அமைந்த தேவியின் திருப்பெயர்களை அழகுற வரிசைப்படுத்தி 69 பெயர்களை இரண்டு பாடல்களில் (பா.11.12) குறிப்பிட்டுள்ளார் இப்பெயர்கள் யாவும் தேவியின் ஆற்றலையும் கருணையையும் புலப்படுத்தி நிற்பவை என்பது கருதத்தக்கது.

## அன்னையும் அடியாரும்

உண்ணும் சோரும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் நாராயணன் எனஆழ்வார் சொல்வது போல ஒரு பாடலில் மனக்கவலை தீர்க்கும் மருந்து என்றுதொடங்குகிறார் வயிறார உண்ண வட்டித்த சோறு தேன் கடல் புலன்களை அடக்கும் அங்குசம் வினை அழிக்கும் தீ என்றெல்லாம் தாயை வருணித்துத்தனக்குவமை இல்லாத தலைவி என்று நிறைவு செய்கிறார்(பா.23) ஸ்ரீசக்ரநிலையத்தில் சிவசக்தி வடிவான ஸ்ரீஇராஜராஜேசுவரி சேமமும் இன்பமும் சித்தியும் உதவுவாள் (பா.45) என்கிறார்.

துயிலெழுந்தது முதல் பல பணியும் புரிகையில் இன்ப துன்பங்களில் இப்படி எல்லா நிகழ்வுகளிலும் அயலெவரும் அறியாமல் அன்னையுனை வழிபடும் ஆசை மகன் நானில்லையா? (பா.30) என்று பாடுவதன் மூலம் எப்போதும் சக்தியடியே சிந்திக்கும் உலகியல் வாழ்க்கையை வலியுறுத்துகிறார்.

"காலை புலர்ந்ததும் உன் பெயர் சொல்லி என்
கண்கள் திறந்தெழுவேன்
வேலை எது செய்த போதும் உன்பேர் சொல்லி
வென்று புகழ் பெறுவேன்"

என்று கண்ணுடைய நாயகி மாலையிலும் அடியார் இயல்பை ஓவியமாக்கியுள்ளார்.

வராத துன்பங்கள் வந்தாலும் தாயே தன் வைப்புநிதி என்று உறுதி கொள்கிறார் (பா.39) துன்பம் வரும்போது மனம் தளர்ந்து இறையைப் பழிப்பது கூடாது என்று இதன் வழி அறிவுறுத்துகிறார் இறைவனை நேசிப்பவர்கள் எவ்வுயிரையும் நேசிக்க வேண்டும் பிறர் துன்பப்பட வேண்டும் என்று எண்ணக்கூடாது இப் பண்பை.

"யாரான போதும் அவர் இன்னலுற ஒப்பாத
என்னைநீ மறுத்தல் தகுமா (பா.39)

என்ற வினாவின் வழி வெளிப்படுத்துகிறார்

மலர்களால் அர்ச்சிப்பது மட்டும் பூசனை அல்ல கல்லினும் இரும்பினும் கடிய மனத்தை இளக்கி பூவினும் மெல்லிதாக ஆக்கி அர்ச்சிக்க வேண்டும் என்கிறார்.

## வரவேற்பு

தீமைகளை அழித்து அறம் வளர்க்கும் அன்னையை எழுந்துவா விரைந்துவா என அழைக்கும் வேளையில்

"மேனியும் ஆடையும் விழிகளும் சிவந்தபடி வீரமா காளியே வா
மேவுபகை யாவினையும் சாவுமகள் நாவில் விருந்தாக்கும் சூலியே வா
ஆனதினி ஆகட்டும் அறம் மட்டும் வாழட்டும் ஆங்கார நீலியே வா
அமைதி வழி மூடுமெனில் அழிவுவழி திறந்தேனும் ஆதிமக மாயி நீ வா (பா.36)

என ஆவேசத் தோற்றத்தை ஓவியமாக்கியுள்ளார்

## வழிபடும் முறையும் கிடைக்கும் வரங்களும்

அன்னையின் திருவுருவத்தை உள்ளத்திரையில் உணர்வுக் கோலால் தீட்டி உயிரென்னும் யாழில் அவள் புகழ் மீட்டி குற்றமற்ற அன்பைத் தீபதூபமாய்க் காட்டி தமிழ் மாலையைத் திருவடியில் சூட்டி வழிபட வேண்டும் என்கிறார் (பா.40)

"யாமும் எம் கல்வியும் யாவும் உன் அடைக்கலம்
ஸ்ரீராக ராஜேசுவரி"

என்று முழுமையாகச் சரணா கதி அடைய வேண்டும் (பா.45) என வழிகாட்டுகிறார்.

நெற்றியில் அவள் தந்த குங்குமம் இருக்கும் போது அடியார் நெஞ்சில் மயக்கமில்லை என்று தொடங்கி அச்சம் இடர் கவலை நோய் பகைகள் இன்னல்கள் இல்லை இல்லை என்று உறுதி கூறுகிறார் (பா.43) முடிவாக அவள் கருணையால் தீராத நோய் தீரும் செல்வம் செல்வாக்கு வெற்றி கிடைக்கும் உயிர் தழைக்கும் பாவமும் பழவினையும் பனிபோல் நீங்கும் பக்தியொடு சொன்னவர்க்குச் சித்திகள் கைகூடும் யாவும் கடந்த பேரின்பநிலை கிட்டும் என வாழ்த்துகிறார்

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்பது கவிஞரின் வேண்டுகோள். எனவே எங்கும் கருணை அரசுபுரிக கயமைகள் நிலம் புதைக யாவர்க்கும் யாவும் இனி எய்த நீ ஆணை தருக துயரங்கள் போயொழிக புதியசொல் புதிய பொருள் புதிய சுவை புதிய இசை உலகெல்லாம் சேர்க என்று வாழ்த்துகிறார் கவிஞர் (பா.4)

## பொதுவான கூறுகள்

அம்மனைக் குறித்த கவிஞர் கு.செ. இராமசாமியின் பிற பாடல்களையும் நா.கனகராஜையரின் புவனேசுவரி அந்தாதிப் பாடல்களையும் பிற கவிஞர் பாடல்களையும் ஒருசேர வாசிக்கும் போது அம்மையின் திருவுருவச் சிறப்பு திருநாமச் சிறப்பு அன்னையின் இயல்பு மற்றும் பேராற்றல் முதலிய செய்திகளே திரும்பத் திரும்ப இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

## அன்னை, பிள்ளை, கன்னி

திருமூலர் தம் திருமந்திரத்தில்,

"வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும் தாரமும் ஆமே"

என்று பராசக்தியை வியந்து பாடுகிறார்.

ஒருபொருள் மூன்றான இந்நிலையை சிவஞான சித்தியார் தெளிவாக விளங்குகிறது சங்கார காலத்தில் சிவத்தில் ஒடுங்கும் சக்தி சிருஷ்டி காலத்தில் அதிலிருந்து வெளிப்பட்டு உலகமாக உயிர்த் தொகுதியாக உருவாகும் இவ்வாறு சிவ தத்துவத்திலிருந்து சக்தி தோன்றும்போது அவள் மகளாகிறாள் சக்தி தத்துவத்திலிருந்து சதாசிவம் ஆகிய சிவன் தோன்றும்போது சிவத்திற்குத் தாயாகிறாள் ஆதிசக்தியாகிய சதாசிவனோடு கூடி உலகையும் உயிர்களையும் தோற்றுவிக்கும்போது தாரம் ஆகிறாள்.

"சிவமெனும் பொருளும் ஆதிசக்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்

இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரி(து)
அரிது என மறை இசைக்குமால்

என விளக்குவர் அருளாளர்.

பிரம்மா விஷ்ணு உருத்திரன் ஈசானன் சதாசிவன் என்ற இறைவனின் ஐவகை வடிவங்களிலும் நின்று படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்ற ஐவகைத் தொழில்களையும் பராசக்தி நடத்துகிறாள்.

சுத்த சிவத்திற்கு உயிரூட்ட வல்லவளாக விலகி நிற்கும் நிலையில் அன்னைஅப்பனுக்குத் தாயாகிறாள் அவனோடு ஒன்றிக் கலந்த நிலையில் தாரமாகிறாள். கலப்பின் பயனாக உலகங்களாகவும் உயிர்த் தொகுதிகளாகவும் கோலங்கொள்ளும் நிலையில் மகளும் ஆகிறாள்.

"அடிதொட்டு முடிவரை அம்மா உன் திருமேனி
அமுதாய் விளைந்த வடிவம்"

என்று தொடங்கும் பாடலில் அன்னையின் இந்நிலையை,

"மூவர்க்கும் அன்னையே பிள்ளையே கன்னியே
மொழியும் புகழ்ச் சரிதையே (பா.4)

(பா. 4 கருணை ஞானாட்சி உமை பதிகம்)"

என்று குறிப்பிட்டுள்ளார் கவிஞர் கு.செ.இராமசாமி

## அம்மையின் முதன்மை

மூவுலகும் தன்னேரிலாத தலைவியென்றேத்தும் தனி முதல் என்று பாராட்டுகிறது சிவயோக நாயகி அந்தாதி அவளது ஐந்தொழில் புரியும் தன்மையை

"முதலாய் முதலுக்கு முன்னாய்
முடிவாய் முடிவின் பின்னாய்
மதிலார் பெருந்துறை மாசக்தி
நீநின்று வையகத்தைப்
புதிதாய்ப் படைத்தும் வகுத்தும்
அளித்தும் பின்பொன்று வித்தும்
கதியாய் அருள் செய்து காப்பவள்
அல்லவோ காரிகையே" (பா.5)

என்று விவரிக்கிறது.

தன்னைத்தனக்கொப்(பு) உரைக்கினும் ஒவ்வாத் தயாநிலையம் என்று பாராட்டுகிறது புவனேசுவரி அந்தாதி இவன் உயர்ந்தவன் இவன் தாழ்ந்தவன் தவம் புரிந்தவன் புரியாதவன் மந்திரம் கூறி வழிபட்டவன் தந்திர நெறி கடைப்பிடித்தவன் இரவும் பகலும் நினைத்து உருகியவன் என்றெல்லாம் வேறுபாடு பார்க்காமல் ஒருநாள் ஒருமுறை மனம் உருகியோ உருகாமலோ அழைப்பவர்க்கும் பெருங்கருணை பொழிபவள் காலம் இடம் காரணம் முதலிய எல்லைகளைத் தகர்த்து எறிந்து நேற்று அருளியது போலவே இன்றும் நாளையும் அருளவேண்டும் என்று நியதியில்லாமல் அருள்பவள் எனவே தன்னையே தனக்கு ஒப்புரைக்க இயலாதவள் தன் பெருமை தானறியாத் தன்மையள் எனவே தனக்கு நிகர் தானாகாத தயாநிலையம் (கருணை நிலையம்) என்கிறது அந்தாதி.

## உருவம் குறித்த விளக்கம்

அம்மையின் திருக்கரத்தில் உள்ள கரும்புவில் என்பது அன்பர் மனம் ஆகும் பூதங்களின் தன் மாத்திரைகள் ஐந்தும் பஞ்சபாணங்கள் ஆகும். மனத்தைப் பற்றி வருத்தும் சினமும் ஆசையும் அம்மை ''ஏந்தியுள்ள அங்குசமும் பாசமும் ஆகும்'', ''என்னை யெனச் சொல் உரிமை அளித்தாய்'' எனத் தொடங்கும் பாடலில் இக்கருத்தை புவனேசுவரி அந்தாதி விளக்குகிறது முக்திக்கு முக்கிய சாதனம் திருவடி மலர்கள் விழிகள் அருளின் அடையாளம் திருவடி இரண்டு விழி இரண்டு கரம் இரண்டு கொண்டு அன்பரை ஆண்டருளுகிறாள் இருகரம் அங்குசம் பாசம் தாங்குகிறது இருகரம் அபய வரத முத்திரை காட்டுகிறது தீயோரை வருத்துவதற்கு இம்முத்திரை அடையாளம்.

## ஓம் சக்தி அம்மா ஆகிய சொற்களின் சிறப்பு

ஓம் என்பதும் சக்தி என்பதும் வெவ்வேறல்ல ஒன்று தான் என்பர் பதஞ்சலி அழியாக் கடவுளின் அழியாப் பெயர் அது அகர உகர மகரம் மூன்றும் சேர்ந்தது ஓம். உருவமற்ற கடவுளின் உருவச் சின்னம் ஓங்காரம் முகமதியர்களின் ஆமின், கிறித்தவரின் ஆமென் சைவத்தின் சிவம் பௌத்தத்தின் ஓம் மணி பத்மஹிம் என்பன எல்லாம் ஓம் என்பதிலிருந்து தோன்றின என்பர் சுத்தானந்த பாரதியார்.

சக்தியின் சிறப்பைப் பாரதியின் வழியில்

"சக்தி சக்தி சக்தி என்றால் சாவை வெல்லலாம்
சஞ்சலத்தை வஞ்சகத்தை நோவை வெல்லலாம்
சக்தி சக்தி சக்தி என்றால் வெற்றி சேரலாம்
சத்தியமாய் எட்டுவகைச் சித்தி கூடலாம்

என்று 'சக்தி தரிசனம்' உறுதி கூறுகிறது

'அம்மா அம்மா எனும் கண்ணீரை மிஞ்சிய அரிய தவம் ஏது வேறு என அருட்பொய்கை வினாவுகிறது தும்மல் இருமல் வரும்போது தொழில்கள் செய்தே எழும்போதும் அம்மா உனைத்தான் அழைக்கின்றோம் என்கிறது மீனாட்சி அந்தாதி

## அன்னையின் இயல்பும் அருட்பார்வையும்

அன்னை பொய்யர் அகத்தில் புகாத மடப்பிடி பொல்லாத பிள்ளையையும் தள்ளாத தாய் அவள் இயல்பை,

"ஊடல் கொணடால் சிரம் கொய்து குதிப்பாய்
உறவு கொண்டால் நலம் பெய்து களிப்பாய்" (பா.4)

என்று போற்றுகிறது பராசக்தி திருப்பள்ளியெழுச்சி

"குற்றம் எல்லாம் பொறுத்து அன்புடன் அள்ளிக்
கொடுக்கும் சிந்தாமணி (பா.22)

என்றும் பரவுகிறது.

நெஞ்சிற் கவலை அனைத்தையும் போக்கிடும் நின்மலை வஞ்சம் பகை, பில்லி, சூனியம் யாவையும் மாற்றிடும் தாய் (பா.3)என்றும் மஞ்சளிலே எந்தவல்வினை நோய்க்கும் மருத்துவப் பார்ப்பவள் (பா. 12) என்றும் கண்ணுடைய நாயகி மாலை பரவுகிறது.

'எத்தனை குற்றங்கள் செய்யினும் மன்னித்து எனை மடியில் வைத்தனை' (பர் 82) எனப் போற்றுகிறது காமாட்சி அந்தாதி சித்தியை வேண்டினாலும் முக்தியை வேண்டினாலும் பக்தியை வேண்டினாலும் இம்மையில் நல்ல போகங்கள் பலப்பலவும் வேண்டினாலும் அத்தனையும் கடைக்கண்ணால் அளிப்பவள் (பா.68) எனச் சிவகாமி அம்மன் அந்தாதி துதிக்கிறது.

அங்கயற் கண்ணி மீனாட்சி என்பன அம்மையின் திருப்பெயர்கள் மீன் முட்டையிடுமாம் பின்பு நீந்திச் சென்று திரும்பிப் பார்க்குமாம் அதன் பார்வை பட்ட அளவில் முட்டைகள் குஞ்சாகப் பொரிந்துவிடுமாம் மீன் போன்ற அருட் பார்வையினால் உலக உயிர்களைப் பாதுகாப்பவள் அம்மை இச்சிறப்பை,

"அன்னையாய் மீன்போல் அருட்பார்வை
கொண்டே அனைத்துலகும்

நன்னிலை நல்கிடும் ஆயிரங் காளியாம்
நாயகியே (பா. 1)"

என்று ஆயிரங்காளியம்மன் அந்தாதி விவரிக்கிறது.

"கண் இமைக்காமல் குஞ்சைக் காத்திடும்
மீன்போல் இந்தப்
புண்ணியச் செல்வி ஏழு புவியையும்
காத்திருப்பாள்"

என்கிறது துணையிருப்பாள் மீனாட்சி என்ற தொகுப்பில் உள்ள பாடல்.

## திருவடிச் சிறப்பு

துன்பம் நீக்கி இன்பம் ஆக்கி கன்மக் களையை எடுத்துக் பிறவித் தளையை அறுத்துப் பேரின்பம் தருவது அம்மையின் திருப்பாதம் என்பதை,

''இன்பம் கொடுக்கும் இருமைக்கும் ஈடணைத் துன்பம் ஒழித்துமனச் சோர்வகற்றும்-கன்மக் களையெடுத்துப் பேரின்பம் காட்டும் பிறவித் தளையறுக்கும் சக்தியின் தாள்''

என மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி அன்னை அருள் விளக்கமாலைப் பாடல் போற்றுகிறது. நான்மறை போற்றும் பதம் செருக்கு முதலிய தீவினை நீக்கும். ''கூற்றம் சீறிவந்து நெருங்காமல் முன் நிற்கும் பதம் விழி நீர் அரும்ப என்னை ஆட்கொண்ட பதம்'' எனச் சிவயோக நாயகி வருணிக்கிறது.

'வடிவான பாத மலர் சூடும் யார்க்கும் மலைகூட விலகி நகரும்' (பா.6) என வருவித்துத் தாங்கும் மருவத்தூர் பதிகம் போற்றுகிறது.

## தீருநாமச் சிறப்பு

அம்மையின் பெயர்கள் அவள் ஆற்றலையும் அருளையும் புலப்படுத்தும் அடையாளங்கள் மாலினி கபாலினி மனோன்மணி நந்தினி எனத் தொடங்கும் பாடலில் 36பெயர்களையும் மாசக்தி கௌமாரி மாதங்கி கங்காளி எனத்தொடங்கும் பாடலில் 36 பெயர்களையும் அழகுற வரிசைப்படுத்தி ராஜராஜேசுவரி மாலை போற்றுகிறது. இவ்வாறு சிவயோக நாயகி அந்தாதி மூன்று பாடல்களில் (பா. 47 53 56) அம்மன் பெயர்களை அடுக்கிப் பரவுகிறது.

## குங்குமச் சிறப்பு

அம்மையின் நினைவோடு குங்குமம் வைத்தால் அனைத்து நோய்களும் போய் விடும் என்பதை,

"நிருமலி உன்தன் நினைவொடு குங்குமம் நெற்றி வைத்தால்
பெருவலி நோய்களும் பில்லி வைப்பு என்று பிதற்றுகின்ற
ஒருகிலியாலாம் உதறலும் காய்ச்சலும் உள்ளுருக்கும்
இருமலும் மற்றும் இடர்களும் நீங்கும் எளிதில் அம்மே (பா.9)

என அருள்மிகு தளிஞ்சை காளியந்தாதி புலப்படுத்துகிறது.

## தொகுப்புரை

பக்தியின் தொடக்க நிலையில் உருவ வழிபாடு என்பது அவசியமானது எனவே அம்மையின் அழகொழுகும் உருவத் தோற்றத்தை அணி நலன் புனைந்த எழிற்கோலத்தை அடிமுதல் முடிவரை வருணிக்கும் போக்கு மிகப்பல பாடல்களில் காணப்படுகிறது அதிலடங்கியுள்ள தத்துவக் கருத்துக்களும் விளக்கப்பட்டுள்ளன.

முன்னைப் புராண இதிகாசக் கதைகளில் காணப்படும் தீயோரை அழித்த அம்மையின் மறக்கருணை பற்றிய செய்திகள் அவ்அசுரர்களின் பெயர்களைச் சுட்டிச் சுருக்கமாகக் குறிப்பிடப்படுகின்றன சிவபெருமான் முருகப் பெருமானின் அருட்செயல்களும் அன்னையின் செயல்களாக ஏற்றிச் சொல்லப்படுகின்றன.

அம்மையின் முதன்மைச் சிறப்பு அழுத்தமாகவும் அருள்பரியும் பண்பு உருக்கமாகவும் பேசப்படுகிறது அவள் சிவனுக்குத் தாயாய் பிள்ளையாய் தாரமாய் இருக்கும் சிறப்பு குறிப்பிடப்படுகிறது அன்னையின் அருட்பார்வையின் சிறப்பு விளக்கப்படுகிறது.

அம்மையின் திருப்பெயர்கள் பலவற்றை வரிசைப்படுத்திப் போற்றும் தன்மை பல கவிஞர்களிடம் மிகுந்துள்ளது அம்மையின் ஓம் என்னும் ஒரெழுத்து மந்திரத்தின் சிறப்பு சக்தி என்ற சொல்லின் பேராற்றல் அம்மா என்ற சொல்லின் பெருமை புலப்படுத்தப் பட்டுள்ளது.

அம்மையை வழிபடும் அடியாரின் இயல்புகள் (தளரா உறுதி உள்ளத் தூய்மை கனிவு பொதுநல விருப்பம்) எடுத்துக் காட்டப்பட்டுள்ளது தாய் சேய் உறவில் உரிமையும் சலுகையும் மிகுதி என்பது அமமை குறித்த பாடல்களால் தெளிவாகத் தெரிகிறது.

தன்னையே தனக்கு ஒப்பாகக் கூற முடியாத பெருங்கருணை நிலையமான அம்மையை வழிபடுவோர் எல்லா நலமும் வளமும் பெறுவர் என்பது அழுத்தமாக வலியுறுத்தப்படுகிறது.

பதிப்பாசிரியர்.

## பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி

பேரறிஞர். தமிழண்ணல்

பேரறிஞர். செ. கந்தசாமி

டாக்டர். ந. சேதுராமன்

பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி

பேரறிஞர். கதிர். மகாதேவன்

பேரறிஞர். அ.அ. மணவாளன்

பெரும் புலவர். இரா. இளங்குமரன்

பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி

பேரறிஞர். இ.கி. இராமசாமி

திரு. சே. அரிராமநாதன்

திரு. வே. திருவரங்கராசன்

திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. © 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. © 2341116